விலை ரூபா 5.00 பக்கங்கள்: 6 Registered as a News Paper in Sri Lanka

21 MAY 2002
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைஞர் முன்னணி
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

வலம்புரி
VALAMPURI

மங்கையர் மனம்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகை மாடம்
177 | 4 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
T. P. 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 07 செவ்வாய்க்கிழமை (21-05-2002) தொலைபேசி 3378 ஒலி 153

புலிகளின் அரசியல் வேலைத்திட்டத்தில் இளைஞர்கள் இணையவேண்டும்

அரசு உரிமையைவழங்கத்தவறின் இறுதிப்போர் வெடிக்கும்?

புலிகளின் பிரமுகர் கரிகாலன் உரை

(மட்டக்களப்பு செய்தியாளர் சுதா)

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு சமாதான வழிமுறைகளின் கீழ் தீர்வு காணப்படுவதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும்- ஸ்ரீலங்கா அரசு இந்த வாய்ப்பைத் தக்கவாறு பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடிய தன்னாட்சி உரிமையுள்ள தீர்வை முன்வைக்குமென நம்புகின்றோம்.

இதனைப் பயன்படுத்த அரசுதவறுமானால் அனைத்துத்தமிழ் மக்களும் தம்மைத் தியாகம் செய்து இறுதிப் போருக்குத் தயாராவாகள்:

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின்மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் எச்சரித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்பு இரண்டாவது தடவையாக அரசியல் வேலைத்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள 30விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்குத் தலைமைதாங்கி மட்டக்களப்புச் சென்ற மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் மக்கள் தமக்களித்த பிரமாண்டமான வரவேற்வை அடுத்துஉரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

செங்கலடி பதுளைவீதியாக கொடுவா மடுப்பால மூடாக வந்த விடுதலைப் புலிகளுக்கு செங்கலடி மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபர் கந்தசாமி தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

கரிகாலன்அங்குதொடர்ந்து உரை யாற்றுகையில் சிறிலங்கா அரசு இனப்பிரச்னைக்கு இறுதியானதும், தீர்க்கமானதுமான முடிவை அறிவித்தால் யுத்தத்திற்கு முடிவு கட்டமுடியும் மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழக் கூடிய தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

கடந்த கால்நூற்றாண்டுகாலமாக பல்வேறு இனப்படுகொலைகள், சொத்தழிவுகளை தமிழ் மக்கள் சந்தித்த போதும் சலுகைகளுக்காக அல்லாமல் தன்னாட்சி உரிமைக்காகவே விடுதலைப் புலிகள் போராடுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் அரசியல் வேலைத்திட்டங்கள் ஊடான போராட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் இணைந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு மீறுவதாக சில விடயங்களை

(6ம் பக்கம் பார்க்க)

காணாமல் போன படையினரின் உறவினர்கள் வன்னிக்கு சென்றனர்

படையினரை வெளியேறக் கோரி

ஹாட்லி; மெதடிஸ்த மிசன் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(திருநெல்வேலி)

பருத்தித்துறையில் உள்ள ஹாட்லிக் கல்லூரி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலை மாணவர்களும் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பாக மாணவர்கள் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது பாடசாலைகளில் படையினர் நீண்டகாலமாக முகாமிட்டுள்ளனர்

(6ம் பக்கம் பார்க்க)

24ந்திகதிமுதல்ஆசிரியர்கள் சுகவீனலீவுப் போராட்டம்

(திருநெல்வேலி)

வடக்குகிழக்கிலுள்ள ஆசிரியர்கள் எதிர்வரும் 24ம் திகதி வெள்ளிக் கிழமை தொடக்கம் காலவரையற்ற சுகவீன லீவுப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்,

படையினர் பாடசாலைகளை விட்டுஉடன் வெளியேறவேண்டும்ஆசிரியர்களுக்குரிய இடைக்கால கொடுப்பனவுகளை வழங்குதல் ஆகியவை உட்பட பலகோரிக்கைகளை முன்வைத்துதேஇச்சுக வீனலீவுப்போராட்டம் நடைபெறவுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

ஆட்டோ-ட்ரக்விபத்து நால்வர் காயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ ட்ரக் வண்டியும் ஆட்டோவும் விபத்துக்குள்ளான சம்பவத்தில் காயமடைந்த

கிணற்றில்விழுந்த குடும்பஸ்தர்மரணம்

(காரைநகர்)

காரைநகர் களபூமிபகுதியிலுள்ள கிணறுஒன்றில் தவறிவிழுந்த குடும்பஸ்தர்ஒருவர் நேற்றுமுன்தினம் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த 3பிள்ளைகளின் தந்தையான விஸ்வநாதன் சந்திரேஸ்வரன் (வயது62) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

(த-246)

(அன்பு வாசகர்களே!)

உறவினரை வன்னிக்கு சென்றனர்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தடுப்புக் காவலில் உள்ள கைதிகளை பார்வை யிடுவதற்காக நேற்று அவர்களது உறவினர்கள் வன்னி சென்றுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஊடகப் பேச்சாளர் அர்ஜின ரணபக்ஸ தெரிவித்துள்ளார்.

காணாமல் போன படையினர் உறவினர் சங்க ஏற்பாட்டில் 16 பேர் கொண்ட குழுவொன்றே வன்னி சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் கடற் பரப்பில் 1994ம்ஆண்டு செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி சாகர வர்த்தனா கப்பல் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப் பட்டது.

இக்கப்பலில் இருந்து விடுதலைப்புலிகள் கடற்படை கட்டளை அதிகாரி உட்பட ஆறு இராணுவ அதிகாரிகளை கைது செய் திருந்தனர்

(6ம் பக்கம் பார்க்க)

இராணுவ டக்வண்டியும் ஆட்டோவும் விபத்துக்குள்ளான சம்பவத்தில் காய மடைந்த நால்வர்யாழ் போதனா வைத் தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்றுகொண் டிருந்த ஆட்டோவே மிருவில் பகுதியில் இராணுவவாகனத்

(6ம் பக்கம் பார்க்க)

(அன்பு வாசகர்களே!
அச்சு இயந்திர பகுதியில்
ஏற்பட்ட கோளாறு
காரணமாக சங்குநாதம்
இன்று வெளிவரவில்லை
நாளை வெளிவரும்
(ஆ-ர்)

சமாதான புகையிரத பவனி நேற்று வவு. வந்தடைந்தது

(வவுனியா)

கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட சமாதான புகையிரதப் பவனி நேற்று பிற்பகல் 3.40 மணிக்கு வவுனியாபுகையிரத நிலயத்தை வந்தடைந்தது.

வவுனியா வந்தடைந்த இந்த சமாதான புகையிரதத்தை வவுனியா அரச அதிபர் கே. கணேஷ், பொலிஸ் அதிபர், மற்றும் இந்து பௌத்த இஸ்லாம் மதகுருமார்கள் உட்பட பெருந்திரளான மக்களும் தமிழ் கலாசார முறைப்படி வர வேற்றனர்.

சமாதான புகையிரதத்தின் முகப்பில் ''போர்பற்றியபயமின்றி நாம் வாழ்வதற்காய் சமாதானத்திற்கு இன்னுமொரு சந்தர்ப்பம் தருக'' என்ற சுலோகம் கட்டப்பட்டிருந்தது.

இச்சமாதானயாத்திரையை அமரர் கலாநிதி நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை நிதியத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பௌத்த பிக்குவான சங்கைக்குரியபத்தேகயசமித்த தேரரும் ஏராளமானசமாதானவிரும்பிகளும் ஊடகவியலாளர்களும் கலைஞர்களும் இந்த யாத்திரையில் வந்திருந்தனர். (ம)

வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் உள்ள படையினர் 160 நாட்களில் படிப்படியாக வெளியேறுவர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள இராணுவம் 160நாட்களுக்குள் படிப்படியாக அவ்விடங்களிலிருந்து வெளியேற இணக்கம் காணப்பட்டுள்ளதாக மாகாண கல்வி விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்தசில தினங்களாக இராணுவ தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் உரியகாலத்தில் பாடசாலைகளில்இருந்து படையினர் விலக்கப்படுவதற்குரியசாதகமான சமிக்ஞைகள்தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர்தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் 84பாடசாலைகளில் படையினர் நிலைகொண்டுள்ளனர் யாழ் மாவட்டத்தில் 50பாடசாலைகள்இயங்காத போதும் 26பாடசாலைகளில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இந்த 26பாடசாலைகளில் 22பாடசாலைகள் உயர்பாதுகாப்பு வலயத்துள்அமைந்துள்ளன ஏனைநான்கு பாடசாலைகளான அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் மந்துவில்ஸ்ரீபாரதி வித்தியாலயம் மந்துவில் றோமன்கத்தோலிக்கத்தமிழ்க்கலவன் பாடசாலை,வரணிமகாவித்தியாலயம் ஆகிய வற்றிலிருந்து படையினர் விரைவில்வெளியேறவுள்ளனர்.

இதேவேளை வவுனியா,

(6ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

தற்பாதுகாப்புக்கென வழங்கப்பட்ட துப்பாக்கிகளை ஒப்படைக்க உத்தரவு

(தொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டதைத்துப்பாக்கிகளை ஒரு வாரகாலத்துக்குள் ஒப்படைக்குமாறு அமைச்சின் பாதுகாப்பு இணைப்பாளர் எல்.ஐ ஆர்.சில்வா உத்தரவிட்டுள்ளார்.

1988 ஆம் ஆண்டு காலத்தின் பின்னர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இது தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் தற்பாதுகாப்புகருதி வழங்கப்படும் துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் பதவி இழக்கும் காலத்தில் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே வழங்கப்பட்டு வருகிறது.

எனினும், இதுவரை ஒப்படைக்கப்படாது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வசமுள்ள இவ்வாயுதங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையம், மாவட்ட பொலிஸ் தலைமையகம் ஆகியவற்றில் ஒப்படைத்து உரிய பற்றுச்சிட்டை பெற்று பாதுகாப்பு அமைச்சுக்கு ஒருவார காலத்துள் அனுப்புமாறும் மேலும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(உ-8)

கொக்குவில் இளைஞர் சவுதியில்விபத்தில் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்குவில் இளைஞர் ஒருவர், சவுதி அரேபியா டமாம் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் பலியாகியுள்ளார்.

சுப்பிரமணியம் கோபிக் கண்ணன் (வயது29) என்ற இறந்தவரின் சடலத்தை சொந்த ஊருக்கு கொண்டுவர, சவுதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த 5 மாதங்களின் முன்னர் சவுதி சென்ற மேற்படி இளைஞர், பெற்றோருக்கு அனுப்புவதற்காகப்பணத்தை வங்கியில் செலுத்தி விட்டு திரும்பும் வழியில் விபத்து இடம் பெற்றுள்ளது. (உ)

யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக இதுவரை 26முறைப்பாடுகள்

செய்தியாளர் மத்தியில் க. காசு தலைவர்

(கொழும்பு)

யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பாக இதுவரை 26 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவர் ஜெனரல் டெரன்ட் புறு கொவ்டே தெரிவித்துள்ளார்.

வவுனியா குருமன்காட்டில் நேற்றுக்காலை நடை பெற்ற செய்தியாளர்சந்திப்பில்பேசும் போதே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அரசாங்கமோ தமிழீழ விடுதலைப்புலிகளோ புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் எவ்விதமான பாரதூரமான சம்பவங்களிலும்ஈடுபடவில்லை என்றும், கண்காணிப்புக்குழுத் தலைவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் துறைப் பொறுப்பாளர்மேலவனும் இச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டார்.

(உ-8)

தேசிய நட்புறவுப் பாடசாலைத் திட்டம் நாடெங்கிலும் அமுலாகும்

(தொழும்பு)

நாடளாவிய ரீதியில் 'தேசிய நட்புறவு பாடசாலை' என்ற திட்டத்தினை இவ்வாண்டு முதல் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்துமாறு பாடசாலைக் கல்வியமைச்சர் சுரனிமலராஜபக்ஷா தெரிவித்துள்ளார்.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் நோக்கம் நாட்டில் தேசிய ஒற்றுமை, சமூக இனங்களுக்கிடையே பரஸ்பர உறவு என்பவற்றினை அமுல் செய்வதாகும்.

6, 7 ஆம் தரம் மாணவர்கள் மத்தியில் தெரிவு செய்யப்பட்ட பாடங்களினை ஆங்கில மொழிமூலம் கற்பதற்காக சகல இனமாணவர்களையும் ஒரே வகுப்பறையில் சந்திக்கச் செய்வதன் மூலம் தேசிய ஒற்றுமையை வளர்க்க முடியும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

(உ-8)

மட்டு.விமானப்படை முகாம்

விஸ்தரிப்புக்கு தடையாக இருந்த ஆலய மண்டபம் தரைமட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விமானப்படை முகாமை விஸ்தரித்து வரும் விமானப்படையினர், அதற்கு இடைஞ்சலாக விருந்த புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் மண்டபத்தை இடித்துத்தரைமட்டமாக்கியுள்ளனர்.

மேற்படி விஸ்தரிப்பின் பொருட்டு புதுநகர் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம், ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியன முகாமில் உள்ளடக்கப்பட்டு, கம்பிவேலி அடிக்கப்பட்டு வருவதுடன்,

தடையாகவிருந்த ஆலயக் கட்டடத்தையும் இடித்துத் தரைமட்டமாக்கியமை, குறித்து பொலிஸ் நிலையம் மற்றும்புரிந்துணர்வு ஒப்பந்த கண்காணிப்புக்குழு தலைமை அலுவலகம் என்பற்றில் முறையிடப்பட்டுள்ளது. சு

இதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 2.2 பிரிவில், ஒப்பந்தம் கைச்சாத்தாகி 30 நாட்களுக்குள் ஆலயங்களில் இருந்து படையினர் வெளியேறுவது தொடர்பாகக் குறிப்பிடப் பட்டிருப்பது சுட்டிக் காட்டத்தக்கது.

(உ)

நாட்டின் பாதுகாப்பைக் கருதி

போலிஸ் திணைக்களத்திற்கு ஆயிரம் பேரை சேர்க்கத்திட்டம்

(தொழும்பு)

தென்பகுதி உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் தற்செயல்களை, முழுமையாகக் கட்டுப்படுத்தபுதிய முறைகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாடு தழுவிய ரீதியில் பொலிஸார் எந்நேரமும் ஜீப் வண்டி, மோட்டார்சைக்கிள், துவிச்சக்கரவண்டி போன்ற வற்றிலும் கால்நடையாகவும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், திடீர் சோதனைகளை நடத்துவர் என்றும்.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக பொலிஸாரின் புதிய நடவடிக்கைகளை விளக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கூறுகையில்;

நாட்டில் அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ளதையடுத்து வடக்கு-கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் பொலிஸார் கட்டம் கட்டமாக தென்பகுதிக்கு இடமாற்றப்படுகின்றனர்.

இதன் காரணமாக தென்பகுதியில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

நாட்டின் பாதுகாப்புக் கருதி பொலிஸ் திணைக்களத்திற்கு ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸாரைச் சேவையில் சேர்க்கவுள்ளோம் என்று குறிப்பிட்டார். (உ)

விபத்தில் 10 பேர் காயம்

(கண்டி)

கண்டியிலிருந்து கலகா நோக்கிச் சென்றதனியார்பஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 10 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம்மாலைவிலியம்பொககலாவல மாவத்தை பகுதியில் இடம்பெற்றஇந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(த)

தென்பகுதி வியாபாரிகள் படையெடுப்பு

நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில்ஆட்குறைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் சூடு பிடித்துள்ள வீதியோர வியாபாரங்களால் இப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் களையிழந்து காணப்படுகின்றன.

யாழ்- கண்டிவீதி திறக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்பகுதியில் இருந்து வருவிக்கப்பட்ட பழவகைகள் அலங்காரப் பொருட்கள், உடுப்புவகைகள் மற்றும் ஏனையவைவீதியோரங்களில் தென்பகுதி வியாபாரிகளால் மிகமலிவாக விற்கப்படுகின்றன.

இதனால் பொது மக்கள் வர்த்தக நிலையங்களுக்குச் செல்வதை இலுமானவரை தவிர்த்து நடைபாதை வியாபாரத்தில் நாட்டம் காட்டுகின்றனர்.

இந்நிலைப் பாட்டினால் நட்டமடைந்து வரும் நகர்ப் பகுதி வர்த்தகநிலைய உரிமையாளர்கள் பணியாளர்கள் சிலரை இடைநிறுத்தியிருப்பதாகவும் அறிய வருகிறது.

(உ- 7)

எப்போதுமில்லா தவாறு அப்பிள், அன்னாசி விலை மிகவும் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதி நடைபாதை யோர வியாபாரிகளால் 5 அப்பிள்கள் 50 ரூபாவாக தற்போது விற்பனை செய்யப்படுகின்றது.

சிறிது காலத்திற்குமுன்னர் வரை ஒன்று 50 ரூபாவாக விற்பனையாகி வந்த அப்பிள தரை வழிப்பாதை திறப்புடன் பெருமளவில் யாழ். குடாநாட்டிற்கு எடுத்துவரப்படுவதையடுத்தே இவ்வாறு விலை வீழ்ச்சி கண்டுள்ளது.

அன்னாசிப்பழத்தின் விலையும் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-2)

இரும்புப் பொருட்களுக்கு யாழ்ப்பாணத்தில் கிராக்கி

(ஈச்சமோட்டை)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் அருகாக சேதமடைந்த நிலையில் உள்ள யாழ் மாநகரசபையின் முன்னாள் அலுவலகத்தில் தேடுவார் அற்றிருந்த இரும்புக் கேடர்களைச் சேகரித்து விற்பனை செய்வதில் சிலர் நாட்டம் காட்டி வருகின்றனர்.

தரைவழிப் பாதை திறக்கப்பட்டதையடுத்து யாழ்.குடாநாட்டில் ஆங்காங்கே குவிக்கப்பட்டு இருந்த பழைய இரும்புப் பொருட்களைத் தேடி எடுத்து தென்பகுதிக்கு எடுத்துச் சென்று நல்ல விலைக்கு விற்றுவருவது தெரிந்ததே. (உ-56)

பரீட்சை இடம் பெற்ற பாடசாலைகள் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/த) பரீட்சை நிலையங்களாக செயல்பட்டு வந்த பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணைக்காக நேற்று ஆரம்பமாகியுள்ளன.

இதேவேளை, யாழ். மத்திய கல்லூரியில் க.பொ.த. (உ/த) பரீட்சை வினாத்தாள்கள் மதிப்பீடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதிலும்கல்லூரி இரண்டாம் தவணைக்காக ஆரம்பமாகியுள்ளதும குறிப்பிடத்தக்கது.

(உ-3)

இயந்திரத்தில் கைசிக்கி காயம்

(யாழ்ப்பாணம்)

மரம் அரியும் இயந்திரத்தில் தவறுதலாக கைஅகப்பட்டதில் இளைஞர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஈவினை புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த யோ. கிருஷ்ணஜெகன் (வயது 23) என்ற இளைஞனே இவ்வாறு காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-10)

இயேசு பாதங்களில்

ஒலிநாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஜேமசன்ட் இறையியல் குழுமத்தின் 'இயேசு பாதங்களில்' என்னும் ஒலிநாடா வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம் பெறவுள்ளது.

அருட்தந்தை ஜெறோலம் பேட் தலைமையில் இடம் பெறும் இந்தஒலிநாடா வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசமும் சிறப்பு விருந்தினராக அருட்தந்தை ஜீவேந்திர போல்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இல்ல நிகழ்வில் ஆய்வுரையை அருட்தந்தை றெக்ஸ் கொன்சன்ரைன் அடிகளார் நிகழ்த்தவுள்ளார்.

(உ-6)

இன்று ஒரு தகவல்

இப்படியும் சில மனிதர்கள்

யாழ்ப்பாணத்தவர் என்று கூறும் போது. பொதுவாகவே சிறந்த கல்விப் பாரம்பரியம் உடையவர்கள், உயர்ந்த பண்பாட்டை பேணுபவர் என்று பலரும் கூறுவது வழக்கம்.

ஆனால் நமது மண்ணில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு, நமது பண்பாடு இவ்வளவு தானா? நாமெல்லாம் மனிதர்கள் தானா என்று சிந்திக்குமளவிற்கு தரம் குறைந்த தாய் அமைந்தது.

நடந்தது இதுதான் வவுனியாவிலிருந்து மோட்டார் சைக்கிளில் ஒருவர் யாழ்ப்பாணம் வந்தார். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றில் சற்பவரான இவரிடம் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை திணைக்கள அடையாள அட்டை, மற்றும் பயண அனுமதி அட்டை போன்ற முக்கிய ஆவணங்களும் இருந்தன. சிறு விடுமுறையைக்கழிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்த இவர் தான் தங்கியிருந்த கிராமத்திலிருந்து யாழ். நகருக்கு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தவேளையில், மேற் கூறப்பட்ட பொருட்கள் அடங்கிய பேர்ஸ் தவறி விழுந்து விட்டது.

செய்வதறியாது திகைத்த இவர் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் அன்று இரவு மதுபோதையில் வந்த சிலர் குறிப்பிட்ட ஆவணங்களை திருப்பிக்கையளிப்பதாயின் ஆயிரம் ரூபா வரையில் தங்களுக்கு தரவேண்டும் என்று பேரம் பேசியதாகவும், பின்னர் 700 ரூபா வாங்கிக் கொண்டு அவற்றை கையளித்தனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் முக்கிய ஆவணங்களை கண்டெடுத்தவர்களும் அதே ஊரைச் சேர்ந்தவர்கள் தான். நமது மனப்பான்மை எங்கு போகிறது? என்பதற்கு இச்சம்பவம் நல்ல ஒரு உதாரணம். தொலைந்த பொருள் திரும்ப கிடைத்தால் அதற்கு வெகுமதி கொடுப்பது இயல்பு தான். ஆனால் மற்றவர்களின் துன்பத்தில் நாம் பணம் சம்பாதிப்போம் என்று எண்ணுவது மனத்தின் வக்கிரத்தையே புலப்படுத்துகிறது.

தகவல் நீர்வையூரான்.

தனியார் பஸ் உரிமையாளர்கள்

விடுதலைப்புலிகளை மீண்டும் சந்திக்கவுள்ளனர்

(கொழும்பு)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே தனியார் பஸ் சேவைகளைநடத்துவது தொடர்பாக கலந்துரையாடவெனஇலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் மீண்டும் கிளிநொச்சி செல்லவுள்ளனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளரை சந்திக்கவுள்ள இவர்கள், தனியார் பஸ் போக்குவரத்தினை ஆரம்பிப்பது தொடர்பான விடயங்களை குறித்தும் கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பிரமுகர் ரவீந்திரன் உட்பட வர்த்தக புள்ளிகள் பலரும் கடந்த செவ்வாய்க்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து கலந்துரையாடியமை தெரிந்ததே.

(க- 08)

ஈச்சம்பழம் பறிக்கச் சென்ற சிறுவரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

ஈச்சம்பழம் பறிக்கச்சென்ற சிறுவர்கள் காணாமல் போய் விட்டதாக வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஆறு சிறுவர்கள் ஈச்சம்பழம் பறிக்க சென்றதாகவும் மூவர் வீடு திரும்பி விட்டதாகவும் ஏனைய மூவரும் வீடு திரும்பவில்லை என்றும் இது குறித்து வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் நடராசா சபேசன் வயது (17), சுந்தசாமி புஷ்பகரன்வயது (15), முகமதுசனிபாஅன்பர் (வயது 13) ஆகிய மூன்றுபாடசாலை மாணவர்களே கடந்த புதன்கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக தெரிய வருகிறது.

வாழைச்சேனை மயிலங்கரை படைமுகாமருகிலுள்ள காட்டிற்கு ஈச்சம்பழம் பறிக்கச் சென்ற வேளையே இவர்கள் காணாமல் போயுள்ளனர். இது குறித்த விசாரணைகள் தொடர்கின்றன.

(க- 08)

சிறுவர் உளநலம் பற்றிய கருத்தரங்கில் அமெரிக்க உளவியல் நிபுணர்பங்கேற்பு

(சுதுமலை)

சிறுவர்களின் உளநலம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று கடந்த சனியன்று யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் அமெரிக்காவில் இருந்து வந்துள்ள உளவியல் நிபுணர் டாக்டர் நானிபரோன் கலந்து கொண்டு, 'குழந்தைகளின் உள நலத்தில் ஏற்படும் பாதிப்புகள்' பற்றி விளக்கமளித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 7 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள 30 இற்கும் மேற்பட்ட குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

(உ-252)

சமாதானத்தை எதிர்ப்பவர்கள் மாற்று வழிகளை கூறுவார்களா?

இராமய பீடாதிபதி விசனத்துடன் வினாவுகிறார

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும்சமாதான முயற்சிகளிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருபவர்கள், சமாதான நடவடிக்கைகளிற்குரிய மாற்று வழிகளையும் தெரிவிக்க வேண்டும்.

அவ்வாறு தெரிவிக்காதவர்கள் அனைவரும் அரசியலில் சுயஇலாபம் கருதியே செயற்படுகிறார்கள்.

இவ்வாறு இராமய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரியதேவல்தெனியமேதாலங்காரதேரர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கடந்த இருதசாப்தங்களாக நடைபெற்று வந்த போர், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து இடை நிறுத்தப்பட்டுள்ள காரணத்தால், நாட்டு மக்கள் அனைவரும்புத்துயிர் பெற்று இருக்கிறார்கள்

இவ்வாறான தொரு முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

(உ-8)

தரமற்ற மாட்டு இறைச்சி விற்பனை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் உள்ள இறைச்சிக் கடைகளில் தரமற்ற மாட்டு இறைச்சி விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

நோயின் தாக்கங்களுக்கு உட்பட்ட மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவதால் அவற்றை உண்பவர்கள் மத்தியில் தொற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அஞ்சப்படுகிறது.

(உ-75)

திருநாள் திருப்பலி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி எதிர்வரும் 26ம் திகதி நடைபெறவுள்ளது

அன்றையதினம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

(த-43)

அலுவலகம் சொந்த இடத்தில்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் இயங்கும் பிறப்பு, இறப்பு, விவாக பதிவாளர் அலுவலகம் ஜூன் முதலாந் திகதி தொடக்கம் மாமுனைப்பகுதியில் சொந்த இடத்தில் மீளவும் இயங்கவுள்ளதாகவும், வாரத்தில் புதன்கிழமைகளில் இந்த அலுவலகம் திறந்திருக்குமெனவும் பிறப்பு, இறப்பு விவாக பதிவாளர் தெரிவித்துள்ளார்

(த-43)

குடும்பஸ்தரை பாம்புதீண்டியது

(மந்திகை)

பளை மாசார் பகுதியிலுள்ள தமதுவீட்டினைத் துப்புரவு செய்துகொண்டிருந்த வேளை அடர்ந்துவளர்ந்திருந்த பற்றைக்குள்இருந்த பாம்புதீண்டியதால் குடும்பஸ்தர்ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை மாசாரைச்சேர்ந்த சின்னத்தம்பி சிவராசா (வயது40) என்பவரே பாம்புக் கடிக்குள்ளானவராவார்.

சனி காலை 7மணிக்கு பாம்புக்கடிக்குள்ளான குடும்ப பஸ்தர் அங்குவைத்தியசாலை மீள இயங்காமையினால் சுமார் எட்டுமணிநேரத்திற்கு பின் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-23)

2002-- 2003 கல்வியாண்டில்

12 ஆயிரத்து 760 பேருக்கு வளாகங்களுக்கு அனுமதி

(கொழும்பு)

கடந்தவருடம்இடம்பெற்ற க.பொ.த(உ/த) பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 98 ஆயிரத்து 432 பேர் பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கு வேண்டிய மிகக்குறைந்தளவு புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுள் 35 ஆயிரத்து 852 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

2002 - 2003 ஆம் கல்வியாண்டில் 12 ஆயிரத்து 760 பேர் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

(உ)

தகவல் தினைக்களத்தின் யாழ். மாவட்ட கிளை ஸ்ரான்லி வீதியில் அமையும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் ஸ்ரான்லி வீதியில் உள்ள மகாலிங்கம் ஸ்ரோரின் இரண்டாம் மாடிக் கட்டடத்தில் அமையவுள்ளது.

பத்திரிகையாளர்தங்களுக்கு தேவையான தகவல்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள வசதியாக அமைக்கப்படும் மேற்படி அலுவலகத்தை மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பக்கீர் மாக்கர் எதிர்வரும் முதலாம் திகதி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பார்.

மேற்படி அலுவலகம் தொலைபேசி, தொலைநகல் கணனி, மின்னஞ்சல் வசதிகளைக்கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

(உ-6)

ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் அவதி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள பாடசாலைகள் சில மீள இயங்குகின்ற போதும் அங்குநிலவும் ஆசிரியர் பற்றாக் குறையினால் மாணவர்கள் முழுமையான கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக பெற்றோர்களும் இப் பகுதி கல்வி மான்களும் கவலைதெரிவித்துள்ளனர்.

இப் பாடசாலை ஆசிரியர்களபலரும் தற்காலிகஇணைப்புடன் வடமராட்சிப் பகுதி பாடசாலைகளில் கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கின் கல்வி நிலைமைகள் தொடர்பாக எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னதாக உயர்மட்டமாநாடுஒன்று கூடப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்றுறோ.க.த.கபாடசாலை தாளையடி றோ.க.த.கபாடசாலை என்பன மீளவும் சொந்த இடங்களில் இயங்கவுள்ளதாகவும்,

அத்துடன் வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் தற்காலிக இணைப்புடன் பணியாற்றும் ஆசிரியர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் வடமராட்சி கிழக்கில் பணியாற்று வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிய வருகிறது.

(த-43)

சிந்தனைக்கு விருந்து

வெற்றியே விளைவது திண்ணம்!

வசித்தவீ டிழந்து வளமெலாந் தொலைந்து
வறுமையிற் சிக்கிடும் பொழுதில்
பசித்தவன் பழைய கணக்கினைப் பார்த்துப்
பரவசம் அடைவதே போன்று
நிசத்தினை விடுத்துக் கானலில் நிலைத்தல்
நேரிதன் றென்பதை உணர்ந்து
விசைத்தெழுந் தயரா முயற்சிகைக் கொண்டால்
வெற்றியே விளைவது திண்ணம்.

- பழையவன்

குடிநீர் விநியோகத்திற்கு வழங்கிய
படகு பயணிகள் சேவையில்

எழுவைதீவு மக்கள் குடிநீர் பிரச்சினை தொடர்கிறது

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு வாழ் மக்களின் குடிநீர் விநியோகத்திற்கெனயு.என். எச். சி ஆர்நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட படகினை ஊர்காவற்றுறை பிரதேச சபை பயணிகள் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது

மேற்படி படகு பயணிகள் சேவைக்கு உகந்ததாக அல்லாது கூடாரம் இன்றி இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

திட்டம் ஆரம்பமாகி 3 வருடங்களாகியும் குடிநீர் விநியோகப் பணிக்காக இந்தப் படகு ஒரு தடவைகூட ஈடுபடுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எழுவைதீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு எந்தவித முடிவும் இதுவரை எட்டப்படவில்லை. (உ-75)

திருமலையில் அனல் மின் நிலையம் அமையும்

(திருகோணமலை)

திருகோணமலையில் அனல் மின்சார நிலையமொன்று அமைப்பது தொடர்பாக அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருவதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்ரோகித போகல்லாகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஜேர்மன், இந்தியா, ஒல்லாந்து ஆகிய நாடுகளின் அனுசரணையுடன், வெளிநாட்டு நிறுவனமொன்று இவ் அனல் மின் நிலையத்தை அமைக்க முன் வந்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்துக்கு அண்மையில் அமைக்கப்படவிருக்கும் இந்த நிலையத்தில் 110 மெகாவோட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.

மேற்படி அனல்மின் நிலையம் அமைப்பதன் மூலம் 3 ஆயிரம் பேர் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

தங்குமிட வசதியில்லையாம்
இந்திய ஊடகவியலாளர்களின் யாழ். குடாநாட்டு விஜயம் ரத்து

(கொழும்பு)

இந்திய ஊடகவியலாளர்களின் யாழ்ப்பாண விஜயம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வந்துள்ள 30 இந்திய ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற மாவட்டங்களிலுள்ள மக்களையும் விடுதலைப் புலி உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், தங்குமிடவசதி, போக்குவரத்து சீரின்மை போன்ற காரணங்களாலேயே இவர்களதுவருகைதடைப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இந்திய- இலங்கை ஊடக நட்புறவுச் சங்கத்தின் வருடாந்த பரஸ்பர பரிவர்த்தனை திட்டத்தின் கீழ் ஏ. கோபாலன் தலைமையில் 30 ஊடகவியலாளர்கொண்டகுழுவொன்று இலங்கை வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் பிரதமர், அமைச்சர்கள் போன்ற அரசியல் பிரிவினருடன் நாட்டு நிலைமைகள் குறித்தும் இவர்கள் ஆராயவுள்ளனர்

கேரளா, தமிழ்நாடு, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலிருந்து வருகைதந்துள்ள இவர்கள் சமாதான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைவதாயின் நீண்ட காலம் எடுக்குமெனவும்கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-8,5)

மாம்பழக் கடையில்
ஹெரோயின் விற்பனை
திருகுதாளம் அம்பலம்

(கொழும்பு)

7 வருடங்களாக கண்டி நவீன சந்தைக்கு முன்பாக நவீன பாணியில்ஹெரோயின் போதைப் பொருட்களை விற்று வந்த நபர் ஒருவரை கண்டி குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மாம்பழங்களை விற்பனை செய்து வரும் இவர் அவற்றுடன் சிறிய பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள்களையும் விற்பனை செய்து வந்துள்ளார்.

இதுவிடயம் தொடர்பாக தகவல் கிடைத்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 160 பைக்கற் ஹெரோயின் போதைப் பொருளையும் மீட்டனர்.

சந்தேக நபர் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை எதிர்வரும் 29-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் உத்தரவிட்டார். (த)

புதிய வைத்திய
அதிகாரி நியமனம்

(சண்டிலிப்பாய்)

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக டாக்டர் ஆர்.யோகராஜா அண்மையில் கடமை யேற்றுள்ளார். (உ-255)

புலிகள் ஒத்துழைப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்ட விரோதமாக மின்சார இணைப்பை ஏற்படுத்திக் கொள்பவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும்நடவடிக்கைளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள மிகுந்த ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் சட்ட விரோதமாக மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதனால், கடந்த இரண்டு வருட காலத்தில் 10 பேர்வரை உயிரிழந்துள்ளனர். (உ-5)

மறியல் போர் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் காணாமற் போனோர் பெற்றோர் சங்கத்தினால், நேற்று முதல் யாழ். செயலகம் முன்பாக நடத்தப்படவிருந்த தொடர் மறியல் போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் நேற்றைய தினம் செயலகப் பணிகள் வழமை போல் இடம் பெற்றன. (உ-10)

ஆப்கானில் அமெரிக்க வீரர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் அமெரிக்க இராணுவ வீரர்ஒருவர்கொல்லப்பட்டுள்ளார்என்றுபென்டகன் தெரிவித்துள்ளது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட அமெரிக்கப் படைகள் மீது நடத்திய தாக்குதலில் இவர் கொல்லப்பட்டுள்ளார். (உ-7)

இழப்பு...

படைத் தேவைகளையும் அபிலாசைகளையுப் நிறைவு செய்யவில்லை எனக் கூறி தமிழர் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள அதனை எதிர்த்தனர். அதேவேளை பிரதான-எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அதனை எதிர்த்ததுடன் அத்தீர்வுத் திட்டத்துக்கு எதிராக பௌத்த பிக்கு ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார்.இவ்வாறான இக்கட்டான சூழ் நிலையில் அத் தீர்வுத்திட்ட சட்டமூலம் வாபஸ்பெறப் பட்டது.

புரட்சிகரநடவடிக்கை

இவ்வாறு பல காரமாக இனப்பிரச்சினைக்கு முன் வைக்கப்பட்ட அனைத்து தீர்வு முயற்சிகளும் பயனற்றுப் போகவே ஐக்கிய தேசியக்கட்சியான, தான் ஆட்சிக்கு வந்தால் யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவேன் என்ற உறுதிமொழியுடன் 2001டிசெம்பர் 05இல் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றது. இந்தவகையில் தனது தேர்தல்கால உறுதிமொழியை நிறைவேற்ற பாடுபட்டு வருகிறது.பேரினவாத சக்திகளின் எதிர்ப்புகள் இராணுவ முட்டுக்கட்டைகள், சமாதானப் போக்கை தடை செய்யும் பல்வேறு சக்திகளின் முட்டுக்கட்டைகள் என்பவற்றுக்கு நடுவில் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு நோர்வேயின் உதவியுடன் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள்

மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் கைச்சாத்திட்டிருப்பது வரலாற்றில்புரட்சிகரமானதொரு நிகழ்வாகும். இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பலவருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-9 கண்டிவீதி திறக்கப்பட்டிருப்பதுடன்மக்களின்நீண்டகால போக்குவரத்து கஷ்டங்கள் நீக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களின் அரசியல் நடவடிக்கைகளுக்காக இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளுக்குச் செல்லஅனுமதிக்கப்பட்டிருப்பது வரலாற்றில் திருப்புமுனையான விடயமாகும்.

தொடர்ந்து பலவருடங்களாக உடல்,உள,பொருளாதாரரீதியிலானபலத்த இழப்புகளை சந்தித்து வந்த தமிழ் மக்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம எதிர்பார்த்தபலனைக் கொடுக்குமா? என்பதற்கு காலம் தான பதில் சொல்ல வேண்டும்.

பற் சிகிச்சை முகாம்

(சுதுமலை)

நயினதீவு பொதுச் சுகாதார பரிசோதகர்பிரிவில் அண்மையில் பற்சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இப்பற்சிகிச்சை முகாமில் மாணவர்கள் உட்பட 350 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். (உ-252)

காலி நகைக் கடையில் தங்க நகைகள் கொள்ளை

(காலி)

காலியில் உள்ள பிரபலமான நகைக்கடை ஒன்றில் சுமார் 25லட்சம்ரூபாபெறுமதியான நகைகள் காரில் வந்த நால்வரினால் துணிகரமாகக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

நேற்று முன்தினம் பிற்பகல் 3மணியளவில் காரில் வந்திறங்கிய நால்வர் நகைகள் கொள்வனவு செய்பவர்கள் போல் நடித்து 25லட்சம்ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு காரில் தப்பிச் சென்று விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக காலிப் பொலிஸார் தீவிர புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (ம)

தெங்குப் பொருள் உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த வருடம் இலங்கையில் தெங்குப் பொருள் உற்பத்தி 10 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நிலவிய கடும் வரட்சி காரணமாகவும் போதிய பசளைகள் பயன்படுத்தப்படாததன் காரணமாகவும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் தேங்காயின் விலை அதிகரித்தது. ஆனால் தேங்காயெண்ணை உற்பத்தியில் மாற்றம் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

கதிர்காம ஆலய சூழலில் கற்பகம்விற்பனை நிலையம்

கடந்த சனியன்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

கதிர்காமக் கந்தன் ஆலயச் சுற்றாடலில், கற்பகம் விற்பனை நிலையம் கடந்த சனியன்று பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசனால் திறந்துவைக்கப்பட்டது.

அன்றையதினம் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பனம் கைப்பணி மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனையாகியதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-2)

ஐ. தே. க. வேட்பாளர் குண்டுத் தாக்குதலில் பலி

(கொழும்பு)

இரத்தினபுரி தீனிமலைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு வீடொன்றின்மீது நடத்தப்பட்டகுண்டுத்தாக்குதலால் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பு,காலி உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நேற்று தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் கண்காணிப்புக்களை மேற்கொள்வதற்கு பவ்ரல் அமைப்பு உட்பட விசேட பொலிஸ் பிரிவினரும் உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் பிரிவு பொலிஸ்மா அதிபர் தெரிவித்திருக்கிறார்.

இரத்தினபுரி, நாத்தாண்டியா ஆகிய பகுதிகளில் தேர்தல் பிரசாரங்களின் போது சிறு சிறு வன்முறைகள் இடம் பெற்றமை தொடர்பாக பொதுஜனஐக்கியமுன்னணி, ஐக்கியதேசியகட்சி, மக்கள் விடுதலை முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளன. (உ-8)

யாழ். நகர நடைபாதை வியாபாரிகளுக்கு மீண்டும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுபவர்களை அவ்விடத்தினின்றும் அகலுமாறு யாழ். மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

தவறினால் நடைபாதையில் காணப்படும் பொருட்கள் யாவும்மாநகரசபையால் அகற்றப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கோட்டை முனியப்பர் ஆலயத்திற் கருகாக நடைபாதைவியாபாரிகளை அகலுமாறு ஏற்கனவே அறிவித்திருந்தமை தெரிந்ததே. (உ)

இழப்புகள் மத்தியில் ஏங்கிநிற்கும் எம்மவர்க்கு

புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிகாரம் தேடுமா?

பல்லினச் சமூகம் வாழ்கின்ற இலங்கையில் சுதந்திரம் பெற்ற காலத்தைத் தொடர்ந்து இனரீதியான பல பிரச்சினைகள் தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. சுதந்திரத்தைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாறிமாறி கடைப்பிடித்த இனரீதியான அரசியல் நடவடிக்கை காரணமாக சிறுபான்மை மக்கள் தமது உரிமைக்காக போராட வேண்டியநிலை ஏற்பட்டது. இதுவே நாளடைவில் தேசிய இனப் பிரச்சினையாக உருவெடுத்தது.

பிரித்தானியர் காலம்

சர்வஜன வாக்கெடுப்பு, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் போன்ற சில அம்சங்களினூடாக பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே இனப் பிரச்சினைக்கானவித்து இடப்பட்டது அக்காலத்திலேயே இனரீதியிலான பாகுபாட்டுக்குஎதிராக சிறுபான்மையினரால்குரல்எழுப்பப்பட்டது. இதனால் பிரித்தானியர் அரசியல் திட்டங்களை அமைக்கும் போது சிறுபான்மையினர் நலன்கருதி சில அம்சங்களை அதில் சேர்த்தனர். அக்கால நிலைமையை நோக்கும்போது பிரித்தானியரிடம் இருந்து எமது தாய்நாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்ற தேசியவாத உணர்வு எல்லோரிடமும் காணப்பட்டதால் இனங்களிடையே ஓரளவு புரிந்துணர்வு காணப்பட்டது. எனினும் பிரித்தானியர் ஆட்சியைத் தொடர்ந்துவந்த பேரினவாத ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட அரசியல் திட்டங்கள் சிறுபான்மையினரின் அபிலாசைகளை திருப்திப்படுத்துவதாக அமையவில்லை.

தனிச்சிங்களச் சட்டம், பிரஜாஉரிமைச் சட்டம் பௌத்தம் அரசமதம், சிங்களம் அரசகருமமொழி போன்ற விடயங்களினூடாக பெரும்பான்மையினர் ஆளும் இனமாகவும் சிறுபான்மையினர் ஆளப்படும் இனமாகவும் மாற்றப்பட்டனர். சுதந்திரத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மேற்படிஇனரீதியான நடவடிக்கைகள் காரணமாக சிறுபான்மையினர் தமது உரிமைக்காகப் போராட வேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டது. இந்நிலைமை மேலும் வளர்ச்சியடைந்து இன்று ஆயுதப் போராட்டமாக உருவெடுத்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல்

சுதந்திரத்தைத்தொடர்ந்து இன்று வரை ஆட்சிப்பீடமேறிய ஆட்சியாளர்கள் பல்வேறு அதிகாரப் பரவலாக்கல் திட்டங்களின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டுள்ளனர். 1957இல் கைச்சாத்திடப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம், 1967இல் கொண்டு வரப்பட்டமாவட்ட சபைகள் (District Councils) 1981இல் கொண்டுவரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகள் (District Developement Councils) 1987இல் கொண்டு வரப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான மாகாண சபைகள் (Provincial Councils) 1994இல் கொண்டுவரப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் திட்டம் போன்றவற்றை சில உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

அதிகாரப் பரவலாக்கல்என்றால் என்ன? என்பதை நோக்கும் போது நாட்டின் அபிவிருத்தி, தேசியஒருமைப்பாடு என்பவற்றைக் கருத்திற் கொண்டு,

மத்திய அரசிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்களை அரசியல்யாப்புக்குஇசைவான வழியில் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் எனபவற்றுக்கு கைமாற்றுதல் அல்லது பகிர்ந்தளிப்பதைக் குறிக்கும்.

இந்த வகையில் 1967 ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாவட்டசபை முறை சிறுபான்மை இனங்களின் உரிமைகளைப் பேணுவதற்காக அதிகாரங்களை பரவலாக்கும் நடவடிக்கையாகக் காணப்பட்டது. இக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிஆட்சியில் இருந்தது. மத்திய அரசின் அதிகாரங்களை சிறுபான்மையினங்களின் நலன்களை பேணக்கூடிய வகையில் மாவட்ட சபைகளிடம்பகிர்ந்து கொடுப்பதெனதீர்மானிக்கப்பட்டது. ஆனால் அன்று பிரதமமந்திரியாக இருந்த டட்லி சேனநாயக்கா எதிர்க்கட்சிகள், சிங்கள குழுக்கள் மற்றும் பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பு காரணமாக இத்திட்டத்தை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

1980 ம் ஆண்டு காலப்பகுதியில் மாவட்டஅபிவிருத்திச் சபைகள் (Districtபevelopment Councils) ஜனாதிபதி ஆணைக்குழுவின் விதப்புரைக்குஅமைய 35 ம் இலக்கச்சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது. இதனூடாகஅதிகாரங்களைபரவலாக்குவதன் மூலம் ஓரளவு இனப்பிரச்சினையை தீர்க்கலாம்எனஎதிர்பார்க்கப்பட்டது. மாவட்ட அபிவிருத்திச்சபையானது இனப்பிரச்சினையுடன் நேரடியாக எவ்வித தொடர்பையும் கொண்டிருக்க வில்லை. இது மாவட்ட மட்டங்களில் நிர்வாகத்தை பரவலாக்குவதன் மூலம் மாவட்ட வளங்களை கண்டு பிடித்து மாவட்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதேஇதன் முக்கிய நோக்கமாகும்கல்வி, விவசாயம், கைத்தொழில்குடியேற்றம்போன்றவற்றின் அதிகாரம் மாவட்ட அபிவிருத்திச்சபைக்கு வழங்கப்படும் என ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தாலும் பின்னர் எந்தவித அதிகாரங்களும் வழங்கப்படவில்லை. இது சிறுபான்மையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது. மற்றும் மாவட்ட அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதி தேவையற்ற விடயங்களில் வீண் விரயமாக்கப்பட்டது. இவ்வாறு மாவட்ட அபிவிருத்தி சபையின் அதிகார மையவாக்க செயற்பாடு அதன் தோல்விக்கு வழிவகுத்ததோடு நாட்டின் இன முரண்பாடு நீங்கும் என்ற எதிர்பார்ப்பை தவறாக்கியது. இச்சந்தர்ப்பத்தில் 1983 இல் வடக்கிலும் கிழக்கிலும் உருவெடுத்த உரிமைப் போராட்டம் இம்முறையை மேலும் முற்றாக செயலிழக்க வைத்தது.

> சுதந்திரத்தைத் தொடர்ந்து இன்று வரை ஆட்சிப்பீடமேறியவர்கள் பல்வேறு அதிகாரப் பரவலாக்கல் திட்டங்களின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டுள்ளனர்.

ப. ரகுமார்
(ஆசிரியர்)
திருநெல்வேலி

இந்தியத் தலையீடு

மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தோல்வியைத் தொடர்ந்து இனப்பிரச்சினை தீவிரமடையத் தொடங்கியது. இக்கால கட்டத்தில் இலங்கைத் தமிழரின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் இந்தியாவின் தலையீடு அதிகரித்தது. இதன்விளைவாகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் அடிப்படையிலான மாகாண சபைத் தீர்வுத் திட்டம் (Provincial Councils) உருவாக்கப்பட்டது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓரளவு பயனுள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தின் முதற்படிஇதுவாகும். இது 1986ன் முன் மொழியப்பட்டாலும் 1987ல்இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு 9 மாகாணங்களும் 9 மாகாண சபைகளும் உருவாக்கப்படுமென்று கூறப்பட்டது.

மேலும் வடக்கு கிழக்குபகுதிகள் தற்காலிகமாக இணைக்கப்பட்டு நிர்வகிக்கப்படும் எனவும் குறிப்பிட்ட காலத்தின் பின்னரான இணைவின் தொடர்ச்சியான தேவை பற்றிய சர்வஜனவாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டு முடிவுதீர்மானிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. இந்த அடிப்படையிலேயே இலங்கை அரசியலமைப்புச் சாசனத்தின் 13 ம் திருத்தச் சட்டம் மூலம் மாகாணசபை முறை ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால்காலப்போக்கில் மாகாணசபைகள் எதிர்பார்த்த அளவுவெற்றி அளிக்கவில்லை. மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட குறைவான அதிகாரங்கள், வடக்கு-கிழக்கு நிரந்தரமாக இணைக்கப்படாமை, மாகாண சபையைக் கலைக்கும் உரிமை முதலமைச்சருக்கு வழங்கப்படாமை போன்ற காரணங்களால் மாகாணசபை முறை வெற்றியளிப்பதற்கு பதிலாக இனப்பிரச்சினை தீவிரமடைய வழிவகுத்தது.

தீர்வுத் திட்டம்

இந்நிலைமையிலே 1994 ம் ஆண்டு பொதுத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி தான் ஆட்சிக்கு வந்ததும் புலிகளுடன் பேசி இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன் எனக் கூறியது. இதற்கமைய மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளதோல்வியில் முடிந்தன. இதன் பின்னர் 1995 ஆம் ஆண்டு பத்திரிகை வாயிலாக ஒரு சீர்திருத்த ஆலோசனையை வெளியிட்டிருந்தது. இதன்படி அம்பாறை நீங்கலாக வடக்கு-கிழக்கு இணைந்த பிராந்திய சபைகள அமைக்கப்படும் எனவும் இலங்கை குடியரசுபிரிக்க முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக விளங்கும் எனவும் கூறப்பட்டது. அத்துடன் பிராந்திய சபைகளுக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறு உருவாக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் தீர்வுத் திட்டத்தை ஆதரித்து ஒத்துழைப்பு வழங்கும்படி பொதுஜன ஐக்கியமுன்னணி அரசாங்கம் பொதுமக்களை கேட்டுக் கொண்டது. இதுவே முதல்தடவை என்பதுயாவரும்அறிந்தஉண்மை. ஆனால் இத்தீர்வுத் திட்டம் நகல்பலத்த விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டதுடன் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் சர்ச்சைக்கு உரியதாக விளங்கியது. பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு, இராணுவ முட்டுக்கட்டைகள், சமாதானப் போக்கை தடைசெய்யமுயலும் பல்வேறு சக்திகள் போன்றவற்றிற்கு நடுவில் இச்சீர்திருத்த நகலில் உள்ள அதிகாரங்கள் காலத்துக்கு காலம்குறைக்கப்பட்டன. பின்னர் 1997 அக்டோபர் 14இல் நீதி அரசியல் யாப்பு அமைச்சினால் தீர்வுத் திட்ட ஆலோசனை வெளியிடப்பட்டது. இத் தீர்வுத்திட்டம் ஓரளவு தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடியதாகஇருந்தாலும் அதனைச் சட்டமாக்கும் நடைமுறைகள் மேற்கொள்ளப்படவில்லை.

பின்னர் 2000ம்ஆண்டு தீர்வுத்திட்ட சட்ட நகல் ஒன்று பாராளுமன்றத்தில் அவசர அவசரமாகச் சமர்பிக்கப்பட்டது. அதுதமிழரின் அடிப்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

குறள்

வலம்புரி

கணனிக் கல்வி

காலத்திற்கு காலம் பரிணாம வளர்ச்சியின் படிகளில் முன்னேற்றம் கண்டுவருகிறது. இன்று நாம் வாழும் யுகம் தகவல் தொழில்நுட்ப அதியுச்ச முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. ஒரு புறத்தில் உலகமயமாக்கல், மறுபுறத்தில் தகவல் தொழில் நுட்பம் இரண்டினதும் இணைவு பரந்த உலகத்தை சுருங்கச் செய்துள்ளது.

உலக நாடுகளின் அதிவேகவளர்ச்சியில் நாமும் இணைந்து கொள்ளாவிடில்உலகம் நம்மைஒதுக்கிவிடும் அவ்வகையில், அரசும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கல்வி முறையினை அறிமுகப்படுத்துவது மிகமிகஅவசியமாகும்

க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு கணனிக் கல்வி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அறிவித்துள்ளமை வரவேற்கத்தக்கது எனினும் யாழ்மாவட்டப் பாடசாலைகளைப் பொறுத்தவரைதம்மிடம்கணனிவசதியிருக்கிறது என்பதைக் காட்டி அதன்மூலப் பாடசாலையின் அந்தஸ்தை உயர்த்த முற்படுகின்றனவே தவிர கணனிகள் மூலம் மாணவர்கள் எந்தளவு தூரம் அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பது கேள்விக்குரியதாகவுள்ளது. கணனிப் பிரிவுகளை ஆரம்பித்து அவற்றை அறைகளில் வைத்துப் பூட்டி அழகு பார்ப்பதனால் எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

அதேவேளை கணனிகளைகல்வியமைச்சு பாடசாலைகளுக்கு வழங்குப் போது வசதி படைத்த - மாணவர்களைச் சேர்க்கும் போது டொனேசன் பெற்றுக் கொள்கின்ற பாடசாலைகளுக்கேவழங்குகிறது - உதாரணமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா யாழ்வந்த போது வசதிபடைத்த பாடசாலைகளுக்கே கணனிகளை வழங்கினார் வளம் குன்றிய பாடசாலைகள் புறந்தள்ளப்பட்டன.

எனவேஇத்தகையஉயர்வு-தாழ்வுகளை பாடசாலைகளில் பார்க்கமுனைந்தால் அது வருங்காலச்சந்ததியைப் பெரிதும் பாதிக்கும் ஆகையால் கணனிக் கல்வி அனைத்து மாணவர்களுக்கும் கிடைப்பது அவசியமாகும்.

தினசரி தியானம்

ஸ்துதி

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

– திருக்குறள்

பழம் பொருளே, உனது புகழில் என்மனது பரம திருப்தியடைந்திருப்பதாகுக.

வெள்ளைத் துணியில் எந்தச் சாயத்தை வேண்டுமானாலும் ஏற்றலாம். மனதின் அமைப்பு அத்தகையது. எதை உவகையுடன் எண்ணுகிறதோ அதன் இயல்பை மனது வாங்கிக் கொள்கிறது. கடவுளின் பெருமைகளையெல்லாம் பேசுவதும் பாடுவதும் ஸ்துதியாகும். உள்ளுணர்ச்சியோடு அவனைத் துதிக்குமனது அவன் மயமாகிறது. அவனது பெருமைகளையே பாராட்டிப் பேசிப்பழக வேண்டும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

இராசி பலன்

21-5-2002
(வைகாசி 7 செவ்வாய்)
நவமி காலை 7 15 வரை
பூரம் மு.ப 11.44 வரை
ராகுகாலம்- 2.52- 4.22
நல்ல நேரம்- 10 22.-11.52
சித்தாமிர்தம்

மேடம்

தாழ்ந்த சுபாவம் காரிய தாமதம், தேவையற்ற வார்த்தை, குடும்பக் கவலை.

இடபம்

மனக்கிலேசம், குடும்ப சுகம், உடல்நலக்குறைவு, போசன சுகம்.

மிதுனம்

தடைப்பட்ட காரியம் கைகூடும், அன்னியர் சந்திப்பு, தனவரவு, சகோதரர் உதவி.

கடகம்

சொத்துக்களால் நன்மை, முயற்சி தாமதம், செல்வாக்கு குறைவு, பொருள் விரயம்.

சிங்கம்

தெய்வ சிந்தை, பெரியோர் சந்திப்பு, நல்லகாரியம், காரிய அனுகூலம்.

கன்னி

அலைச்சல், புதிய திருப்பம், அபகீர்த்தி, சயன சுகக் குறைவு.

துலாம்

காரியம்கைகூடும், தொழில் லாபம், பொருள் விரயம், அதிகாரிகள் வெறுப்பு.

விருச்சிகம்

கடின முயற்சி, நல்ல சம்பவம், உறவினர் உதவி, காரிய சித்தி.

தனுசு

கட்டுப்பாடு, மனச்சஞ்சலம், நண்பர்கள் உதவி, தொழில் நன்மை.

மகரம்

எதிர்பாராத பிரச்சினை, முயற்சிதாமதம், குடும்பத்தில் அமைதிக் குறைவு, உடல் வியாதி.

கும்பம்

சென்ற இடத்தில் செல்வாக்கு, காரியம் கைகூடும், தனலாபம், தொழில் நன்மை.

மீனம்

உடல்நலம், இலட்சுமிகரம், காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி.

(பழைய நேரப்படி
கணிப்பிடப்பட்டது.)

வளவன்

லாலா சோப்

லாலாவின் தயாரிப்பு
சண்சயின் சோப்

எமது வன்னிமண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு அண்மித்துவிட்டது

லாலா

அச்சுவேலி.

ஒஸாமா உயிருடன் உள்ளாரா?

உண்மையை ஊகித்தறிய முடியாது வல்லரசுகள் பெரும் திண்டாட்டம்

(லண்டன்)

இஸ்லாமிய தீவிரவாதியான ஒஸாமாபின் லேடன் தோன்றும் ஒளி நாடாவை பிரிட்டனின் இஸ்லாமிய செய்திச் சேவை ஊடகம் ஒன்றுநேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

மேற்படி ஒளிநாடா ஓரிரு மாதங்களிற்குள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4 அல்லது 5 மாதங்களின் முன்னர் அதனைப் பார்த்ததாகவும் அது கடந்த செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருக்கலாம் என்றும், அரபுரக செய்தி ஊடகமான அல்ஜசீரா அமைப்பு தெரிவித்துள்ளது.

சுமார் 100 செக்கன்கள் பதிவாகியுள்ள குறிப்பிட்ட ஒளி நாடாவில் தனது சகாக்களுடன் கூடி நிற்கும் பின்லேடன் இறந்த தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளது.

இது குறித்து பிரிட்டன் தெரிவித்த தகவலில், இந்த ஒளிநாடா இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் பதிவாகியிருந்தால், ஆப்கான் மீதான அமெரிக்காவின் உக்கிரத்தாக்குதலுக்குஅகப்படாமல் இப் பொழுதும் இருக்கிறார் என்பது தெளிவாகியுள்ளது.

எனினும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் பதிவாகியிருந்தால் பின்னர் நடந்த தாக்குதலில் பின்லேடன் பலியாகியிருக்கலாம் என்றுஊகிக்க முடிகிறது.

இதனால் பின்லேடன் இறந்திருக்கிறாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா என்ற உண்மையை ஊகித்தறிய முடிய வில்லை என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

(உ-7)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்பாதுகாப்பு நிதி சிறுவர் உரிமைகள் பயிற்சி பாளர்களுடனான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் சிற்றி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர்உரிமைகள் தொடர்பான எதிர்காலவேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் பயிற்சியாளர் அனைவரையும் பங்குபற்றுமாறு திட்ட அலுவலர் ஜெ.தற்பரன் கேட்டுள்ளார்.

(ம)

ஹாட்லி

இதனால் நாங்கள் சுதந்திரமாக கல்விகற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தினமும்படையினரின் சோதனைக் கெடுபிடிகளின் பின்னரே வகுப்புகளுக்குச்செல்ல வேண்டியிருப்பதால் நாம்உளவியல் ரீதியாக பாரிய பாதிப்புக்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளது.

இந்நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் எங்களது பாடசாலைகளை விட்டு படையினர் வெளியேறுவரென எதிர்பார்த்திருந்தோம். ஆனால் படையினர் இதுவரை வெளியேறவில்லை.

எனவே படையினர் இப் பாடசாலையை விட்டு வெளியேறும் வரை வகுப்புப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இதற்கு குடாநாட்டின் ஏனையபாடசாலை மாணவர்களினது ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம் என்றுள்ளது.(த. 43)

காணாமல்

இவ் ஆறு படையினரையும் பார்ப்பதற் காகவே 16 பேரும் வன்னி சென்றுள்ளனர்.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் தமது பாதுகாப்பில் இருந்த 7 கப்பல் சிப்பந்திகளை விடுவத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ 8)

ஐ- தே. கட்சி முன்னணியில்

(கொழும்பு)

பதினேழு உள்ளூராட்சிமன்றங்களுக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் இதுவரை வெளியான முடிவுகளின் படி ஐக்கியதேசியக்கட்சி முன்னணியில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவற்றில் இரண்டு உள்ளூராட்சி சபைகளில் ஐக்கியதேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

அரசு உரிமையை

மேற்கோள்காட்டி உரையாற்றியதுடன் யுத்தநிறுத்தஉடன் படிக்கையை விடுதலைப் புலிகள் உறுதியுடன் கடைப்பிடித்து வருவதாகவும் கரிகாலன் தெரிவித்துள்ளார்.

இந்திய-பாக் எல்லையில்

துப்பாக்கிச்சமர் தொடர்கிறது இருதரப்பிலும் 23 துருப்புகள் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர்மாநிலத்தில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் துப்பாக்கிச் சமரில் 9 இந்தியப் படையினர் உட்பட 14 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்திய -பாகிஸ்தான் எல்லையில் இருதரப்பு படைகளுக்கும் இடையில் கடந்த சில நாட்களாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுவருகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் அப்பகுதிகளில் இடம் பெற்றமோதல்களில்14பாகிஸ்தான் இராணுவத்தினர் பலியாகியுள்ளமையும்இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-7)

45 கண்காணிப்பாளர்கள் இலங்கை வருகை

(வவுனியா)

யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு மேலும் 45 வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வரவுள்ளனர்.

இவர்களில் இருவர் வவுனியா மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் இணைந்து கொள்ளவுள்ளனர்.

புரிந்துணர்வு உடன் படிக்கை ஏற்பட்ட பின் அரசாங்கக் கட்டிடங் களிலும் பாடசாலைகளிலும் வழிபாட்டு தலங்களிலும் முகாமிட்டுள்ள படையினர் வெளியேறி இருக்கவேண்டும். இது எவ்வளவு தூரம் நிறைவேறி இருக்கிறது என்பதைக் கண்காணிப்பதற்கு விடுதலைப் புலி உறுப்பினர்கள், கண்காணிப்புக்குழுக்கள், பொலிசார் அரசஅதிபரின் பிரதிநிதிகள் ஆகியோர் நாளை புதன்கிழமை வவுனியாவுக்கு நேரில்சென்று பார்வையிடவுள்ளனர் (ம)

தற்கொலைத் தாக்குதல்
20 இஸ்ரேலியா பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 20 பேர்படு காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலின் மத்திய பகுதியான நேத்தன்யாவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இஸ்ரேலிய இராணுவ சீருடைஅணிந்த ஒருவர் சனநடமாட்டமுள்ளபகுதிக்குள் சென்று குண்டினை வெடிக்கவைத்துள்ளார்.என தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

சண்டேலீடரின்ஆசிரியருக்கு எதிரான வழக்கு வாபஸ்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அவதூறு ஏற்படுத்தினார் என்ற குற்றத்தின் பேரில் சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியர் லவன்த விக்கிரமசிங்காவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குவாபஸ் பெறப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணை ஆரம்பமான போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி குற்றப்பத்திரிகையை வாபஸ் பெற்றுள்ளார்.

1999 ம் ஆண்டு யூன்மாதம் 27 ம் திகதி சண்டேலீடர் பிரசுரித்த அறிக்கை ஒன்று தொடர்பாகவே சட்டமா அதிபர் வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இதேவேளை குற்றவியல் அவதூறுச்சட்டம் பத்திரிகையாளர் மன்றம்ஆகியவற்றை ஒழிப்பது தொடர்பாக அரசு கொள்கையளவில் தீர்மானம் எடுத்துள்ளதால் இந்தவழக்கை வாபஸ்செய்வது என்றும் சட்டமாஅதிபர் முடிவுசெய்துள்ளார். (இ-5)

படையினா

மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் விரைவில்வெளியேறுவதற்கு இணக்கம்தெரிவித்துள்ளதாக அவர்மேலும்தெரிவித்துள்ளார். (த)

24ம் திகதி முதல்

இந்த சுகவீனலீவுப்போராட்டம் தொடர்பாக குடாநாட்டு பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்றுபி.ப3மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

(த-43)

ஆட்டோ.ட்றக்

துடன் விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் ஆர்.விஜயசந்திரன்(வயது20) பி.நகுலேஸ்வரன்(வயது29) ரி.புவனேஸ்வரி (வயது26)என்.கிருஷ்ணவேணி (வயது41)ஆகிய நால்வருமே காயமடைந்துள்ளனர்.

(த-10,43)

உளவாளி
இந்தியாவில் கைது

(புதுடில்லி)

பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ எஸ் ஏயின் உறுப்பினர் ஒருவரையும் அவரது மனைவியையும் இந்திய புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து இந்திய பாதுகாப்பு தொடர்பான ஆவணங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களின் முகவரிகள் அடங்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் புதுடில்லியில் வைத்து கைது செய்யப்பட்ட இவர்கள் உளவாளி ஒருவரின் தகவலை அடுத்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

(உ-7)

இந்தியா போர்தொடுத்தால் பாக். தக்கபதில் கொடுக்கும்

(இஸ்லாமாபாத்)

இந்தியா பாகிஸ்தான்மீது போர் தொடுக்குமாயின் அதற்குத் தகுந்தபதிலடி கொடுக்க பாகிஸ்தான் தயாராகவுள்ளதாக அந்நாட்டின் புலனாய்வுத்துறை இயக்குநர் ரசீத்குரோசி தெரிவித்துள்ளார்.

கரஷ்மீர் எல்லையில் இடம் பெற்றதாக்குதல் சம்பவமானது முழுஅளவிலானபோராக வெடித்தாலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை அவ்வாறு நிகழும் பட்சத்தில் இந்தியாவுக்கு தகுந்தபதிலடி தரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காஷ்மீரில் இடம்பெற்ற மோதல்சம்பவங்கள் தொடர்பாகவும் தற்போதைய சூழ்நிலை தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தியுடன் வாஜ்பாய் ஆலோசனை நடத்தியுள்ளார் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக நேற்றுமுன்தினம்மாலை மத்தியஅமைச்சரவைக் கூட்டத்தையும் வாஜ்பாய் கூட்டினார். (த)

கண்ணீர் அஞ்சலி

கச்சாய் கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் முன்னாள் பரிபாலனசபைத் தலைவரும் கச்சாய் அ. த. க. பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியருமாகிய,

திரு. முருகப்பா
அவர்களின்

மறைவினால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அஞ்சலிகள்.

நண்பர் குழாம்.
வினோபா சனசமூக நிலையம்,
கச்சாய்.

(5328)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21-05-2002இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது